RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s534

OPEN ACCESS

# பள்ளிகொண்டபுரம் நாவல் உணர்த்தும் வாழ்க்கைச் சித்தரிப்புகள்

**தா. அகிலா ரூபி [அ, *], இரா.ச. சுகிர்தா பஸ்மத் [ஆ]**

[அ] தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி), (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துடன் இணைவுப் பெற்றது) நாகர்கோவில்-629001, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகர்கோவில்-629004, தமிழ்நாடு, இந்தியா

# Depictions of Life as portrayed in the novel Pallikondapuram

**D. Ahila Rubi [a, *], R.S. Sugirtha Basmath [a]**

[a] Department of Tamil, Scott Christian College (Autonomous), (Affliated to Manonmaniam Sundaranar University) Nagercoil-629001, Tamil Nadu, India

[b] Department of Tamil, Government Arts and Science College, Nagercoil-629004, Tamil Nadu, India

* Corresponding Author: ahilarubi2019@gmail.com

Received: 15-08-2021
Revised: 19-06-2022
Accepted: 09-07-2022
Published: 25-08-2022

Check for updates

**ABSTRACT**

The classical language, Tamil, has infinite creative elements. In the literary works from the Sangam age to the present day, it is known that the soil and man are the objects of the subject. Literature, which is life's fiction, serves as a repository for describing people's lives. Thus, novel literature has the ability to record all aspects of life. The novel Pallikondapuram has captured the life stories of the people of Kerala very well. The fact that the cultural and cultural events that are integral to the lives of people are marked as traces of life gives a sense of history. The novel Pallikondapuram has captured the life stories of the people of Kerala very well. The fact that the cultural events that are integral to the lives of people are marked as traces of life gives a sense of history. Thus, this article describes the life stories mentioned in the novel Pallikondapuram.

**Keywords:** Pallikondapuram, Depictions of Life, Kerala people, Portrayal

## முன்னுரை

படைப்பிற்குப் படைப்புச் சூழல் தேவை. அப்படைப்புச் சூழல் படைப்பாளியின் படைப்புத் திறனுக்கு ஏற்ப மாறுபடும் கதையை நகர்த்திச் செல்ல முற்படும் படைப்பாளி கதாப்பாத்திரங்களின் வாழ்க்கை முறைமைகளை படைப்புகளில் பதிவுப் செய்கிறார். வாழ்க்கை சித்தரிப்புகள் கதாப்பாத்திரங்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன. அன்றாடவாழ்வுகள் இணைத்தக் கூறுகளைக் கொண்ட தொகுப்பாக படைப்புகள் விளங்குகின்றது. அதனால் இவ் வாழ்க்கைத் தொகுப்புகள் யாவும் பண்பாட்டு விழுமியங்களாகக் கருதப்படுகிறது. கேரள மக்களின் வாழ்வியற் முறைகளும் நம்பிக்கைகளும் மாறுபாடு உடையவை. பள்ளிகொண்டபுரம் நாவல் நடைபெறும் கதைக்களம் கேரளம். ஆதலால் கேரள மக்களின் வாழ்க்கைச் சித்திரிப்புகளை இயல்பாக விளக்கியுள்ளார் ஆசிரியர் (Padmanabhan, 1970). பள்ளிகொண்டபுரம் நாவலில் புலப்படும் வாழ்க்கைச் சித்தரிப்புகள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

## பள்ளிகொண்டபுரம்

பள்ளிகொண்டபுரம் நாவலின் ஆசிரியர் நீலபத்மநாபன். இவர் கேரளாவில் வாழும் தமிழ் எழுத்தாளர். படைப்புகளில் தனக்கென தனியிடம் பெற்றவர் ஆசிரியர் நீலபத்மநாபன். 1970ஆம் ஆண்டு

வெளிவந்த பள்ளிகொண்டபுரம் நாவல் ஆசிரியர் நீல பத்மநாபனின் இரண்டாவது நாவல் ஆகும். பள்ளிகொண்டபுரம் என்னும் நாவலின் தலைப்பு கேரளாவின் தலைநகரான திருவனந்தபுரத்தைக் குறிக்கிறது. திருவனந்தபுரத்தில் மகுடமாய் திகழும் ஸ்ரீ பத்மநாப சுவாமி கோயிலில் பள்ளி கொண்டு காட்சியளிக்கும் மகாவிஷ்ணுவின் பெயரைத் தாங்கி பள்ளிகொண்டபுரம் என்னும் பெயரை இந்நாவல் கொண்டுள்ளது. பள்ளிகொண்டபுரம் நாவல் நேஷனல் புக் ட்ரெடிஷனல் (NBT) தேர்வு செய்யப்பெற்றதும், பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பெருமையும் பெற்றது. இந்நாவல், பள்ளிகொண்டபுரம் நாவல் நனவோடை உத்தியில் எழுதப்பட்ட நாவல் ஆகும். தனிப்பட்ட மனிதனின் வாழ்வு பற்றிய குறிப்புகளாக நாவல்கள் திகழ்கின்றன. ஆசிரியர் நீலபத்மநாபன் தான் வாழும் சூழ்நிலையில் காரணிகளை வாழ்வியலோடு இணைத்து பள்ளிகொண்டபுரம் ஆக வடிவமைத்துள்ளார். பள்ளிகொண்டபுரம் நாவலின் கதைத் தலைவனான அனந்தன் நாயரின் 48 மணி நேரத்திற்குள் நடக்கும் நிகழ்ச்சிகளும், அவை மூலம் கதாபாத்திரத்தின்ப் மனவெளியில் நிகழ்வு நினைவுகளும் விவரிக்கப்பட்டுள்ளது.

"கடவுள் பள்ளிகொள்ளும் நகரம் என்று பொருள் படும் படியான பள்ளிகொண்ட புரத்தில் அனந்தன் நாயரின் வாழ்க்கை அவலங்களை நகரத்தின் சமூக கலாச்சாரப் பின்னணியாக வைத்து சித்தரிக்கிறார். கதைத் தலைவனுடைய தனித்தன்மையின் நீள அகலஆழங்களை ஆசிரியர் சித்தரிக்கிறார். அத்துடன் அவர் வாழும் அழகிய நகரத்தின் புராண வரலாற்றுப் பின்னணிகளையும் சமுதாயத்தில் படிந்துவிட்ட குற்றங்களையும் வரைந்து காட்டுகிறார்" (Sanmugasundaram, 1999).

## இலக்கியத்தில் வாழ்வியல் சித்தரிப்புகள்

காலத்தைக் காட்டும் கண்ணாடியாகத் திகழும் இலக்கியங்கள் வாழ்வியற்சித் தரிப்புகளைத் தன்னகம் கொண்டு திகழ்கின்றன. முதற்பொருள், கருப்பொருள் என்னும் பாகுபாடு பண்டைத் தமிழரின் வாழ்வியல் கூறுகளை நமக்குச் சிறப்பாக அட்டவணைப்படுத்திக் காட்டுகின்றன. சங்ககால மக்களின் வாழ்க்கை முறைகள் வரையறைக்கு உட்பட்டதும் ஒழுக்கமுடையதுமாக இருந்தது.

வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப மக்கள் தங்கள் வாழ்க்கை முறைகளை வகுத்துக் கொண்டனர்.

"தெய்வம் உணாவே மா மரம் புள் பறவை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப"

என்னும் தொல்காப்பிய நூற்பா வாழ்வியல் செய்தியை விளக்குகின்றது (Ilampuranar, 2005).

பள்ளிகொண்டபுரம் நாவலில் கேரள மக்களின் உணவு, உடை, நம்பிக்கை, விழாக்கள் எனும் வாழ்வியல் சித்தரிப்புகளாக விவரிக்கப்பட்டுள்ளன.

## உணவு

அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது உணவு. உணவு என்பதற்கு 'ஆகாரம், சோறு, போஜனம்' என விளக்கம் தருகிறது யாழ்ப்பாணம் தமிழ் அகராதி. "உணவுப் பழக்க வழக்கங்கள் ஒரு சமூகம் வாழும் பருவச் சூழ்நிலை வாழ் நிலத்தின் விளைபொருள்கள் சமூகப் படிநிலைகள், உற்பத்தி முறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொருத்து அமையும்", குறிப்பிடும் கூற்றிற்கு இணங்கும்படி சமூகத்தின் சூழ்நிலைக்குத் தகுந்த உணவு முறையை ஆசிரியர் நீலபத்மநாபன் சிறப்பாக பதிவு செய்துள்ளார்.

உணவு வாழ்வதற்கான ஆதாரம். வாழ்க்கை வாழ உணவு எனும் சக்தி தேவைப்படுகிறது. "அண்ணல் காந்தியடிகள், காற்றும் தண்ணீரும் இல்லாமல் மனிதன் உயிர் வாழ முடியாது என்றாலும், உடம்பைப் பேணி வளர்ப்பது உணவு தான். அதனால் தான் உணவே உயிர் எனப்படுகிறது" என்று உணவின் தேவையை அறிவிக்கிறார் (Gurusamy, 1999).

சாதாரண நாட்களில் உண்ணும் உணவைவிட விழாக்கள் கொண்டாடும் நாட்களில் உண்ணும் உணவு விருந்து உணவாகக் காணப்படுகிறது. பிறந்தநாள், திருமணநாள் எனும் மகிழ்வான நாட்களில் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்க அதிக உணவுகள் சமைக்கப்படுகின்றன. பள்ளிகொண்டபுரம் நாவலில் அனந்தன் நாயரின் பிறந்தநாளின் போது மகள் மாதவிக் குட்டி வழக்கமான கோதுமை உணவை மாற்றி பாயாசத்துடன் சேர்ந்த விருந்து உணவை சமைப்பதைக் காணமுடிகிறது.

“சாப்பாட்டுக்குப் பாத்திரத்தை திறக்கும்போது புளிசேரியும், ஓலனும், பிரதமனும் கமகமவென்று மணக்கின்றன குஞ்சம்மா தன் பிறந்தநாளை லேசில் விட்டு விடவில்லை…….! வழக்கமான கோதுமைச் சாப்பாட்டிலிருந்து இண்ணைக்கு ஒரு நாள் மட்டுமாவது தனக்கு விடுதலை தர மாதவிக்குட்டி உத்தரவு கொடுத்திருக்கக் கூடும்” (Padmanabhan, 1970).

வழக்கமாக சமைக்கும் உணவுகளிலிருந்து விருந்து உணவின் போது கேரளாவின் பரிமாறப்படும் உணவு முறைகளை அறிமுகப்படுத்துகிறார் ஆசிரியர். தயிர் வைத்து தயாரிக்கும் புளிச்சேரி குழம்பும், பெரும் பயறு, கும்பளங்காய், தேங்காய்ப் பால் சேர்த்து ஓலனும், சர்க்கரையும் கடலையும் சேர்த்து வைத்த கடலை பாயாசம் (பிரதமன்) விருந்து உணவாகத்தயாரித்து விளக்கப்பட்டுள்ளது. இதனூடாக கேரள மக்கள் விருந்தின்போது சமைக்கப்படும் உணவு முறைமை விளக்கப்பட்டுள்ளது (Padmanabhan, 1970).

“கோயில் இல்லாத ஊரில் குடியிருக்காதே” என்பது பழமொழி. நம்பிக்கைகள் நிறைந்த கேரள நாட்டில் கோயில்கள் சார்ந்த வாழ்வியல் அதிகம். அன்றாட வாழ்வில் கோயில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. கோயில்களைச் சார்ந்து பல குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. தானங்களில் சிறந்த தானமான அன்னதானம் கோயில்களில் காணப்பட்டது. பள்ளிகொண்டபுரம் நாவல் எழுதப்பட்ட காலகட்டத்தில் ஸ்ரீ பத்மநாப சுவாமி கோயிலில் நடைபெற்ற அன்னதான முறைமையைப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர் நீலபத்மநாபன். ஆலய தரிசனத்திற்காக மகாராஜா தினமும் ஸ்ரீ பத்மநாப சுவாமி கோயிலில் வருகை தருவார். தினமும் கோயிலில் வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். “காலை தரிசனத்திற்கு ஏழே முக்காலுக்கு கோவிலுக்குள் விஜயம் செய்யும் மகாராஜா தரிசனம் முடித்து எட்டே முக்காலுக்கு வெளியில் இறங்கையில், பருப்பு, அப்பளம், வடை, சாம்பார், மூன்று கூட்டம், பிரதமன் சகிதம் உள்ள பந்திச் சாப்பாட்டுக்காக இங்கே ஆயிரக்கணக்கில் பெரிய பெரிய தலைவாழை இலைகள் வரிசை வரிசையாகப் போடப்பட்டிருக்கும்.” உணவு பற்றாக்குறையும் வறுமையும் கொண்டிருந்த காலகட்டத்தில் ஏழை-எளிய மக்களின் பசியைப் போக்கும் கருவியாகக் கோவில்களில் அன்னதானம் காணப்பட்டது சிறப்பிற்குரியது. பசியைப் போக்கும் நோக்கம் மட்டுமன்றி விருந்து உணவு வழங்கும் தன்மையும் போற்றுதற்குரியது (Padmanabhan, 1970).

## உடை

உடலை மறைப்பதற்கு மனிதன் பயன்படுத்துவதே உடை எனப்படுகிறது. கலாச்சார மாறுபாட்டிற்கு ஏற்பவும், காலநிலைக்கு ஏற்பவும் உடை மாறுபடுகிறது. சாதாரண நாட்களை விட விழாக்காலங்களில் ஆடம்பரமான உடைகளை அணிகின்றனர்.

உடை என்பது அணிபவரைக் காக்கும் கவசம் என்பதை கவிஞர் வைரமுத்து

“குளிர் - மழை - வெயில் - மானம்

நான்கும் செய்ததே

உடை உடுத்தும் நாகரீகம்”

பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் முறையாகப் பின்பற்றுபவர்கள் கேரள மக்கள். மரபு ரீதியான உடையைச் சிறப்பு நாட்களில் பயன்படுத்துவர். அனந்தன் நாயர் கார்த்தியாயினியைப் பெண் பார்க்க சென்ற போது பாரம்பரிய உடை அணிந்து நின்றதைக் காண இயலுகின்றது (Vairamuthu, 1999).

"ஜரிகை நேரியதும் வேஷ்டியும் உடுத்து பின்பக்கம் ஜிலுஜிலுவென்று நீண்டு கிடந்த கூந்தலில் பிச்சி ஆரமும் சூடி” என்று கார்த்தியாயினி அணிந்திருந்த ஆடையைப் பற்றி கூறுவதன் மூலம் கேரள

மக்களின் சிறப்பான நாட்களில் ஜரிகை நேரியல் ஆடைகளைப் பயன்படுத்தினர் என்பது தெளிவாகிறது (Padmanabhan, 1970).

கார்த்தியாயினியும் அனந்தன் நாயரும் திருமணம் முடிந்து கோவிலுக்குச் சென்றனர். கோவில் பிரகாரத்தை பார்த்துக் கொண்டு நின்ற போது கார்த்தியாயினியின் உடையின் அழகை,

கசவு போட்ட வெள்ளைப் புடவை உடுத்தி எண்ணெய்

மினுமினுப்பு பளிச்சிட்ட முகத்தில் அபாரமாக ஒரு

களை துலங்க அவள் நின்ற அழகு”

என்று அனந்தன் நாயர் கூறுவதன் மூலம் கசவு போட்ட வெள்ளைப் புடவையை பெண்கள் பயன்படுத்தினர் என்பதை அறியமுடிகிறது (Padmanabhan, 1970).

## நம்பிக்கை

மரபு சார்ந்த நிகழ்வுகள் யாவும் நம்பிக்கையாக எஞ்சுகின்றன. நம்பிக்கைகள் வாழ்வின் நீட்சியாகத் தொடர்கின்றது. கேரள மக்கள் தெய்வ நம்பிக்கை மிகுந்தவர்கள் தெய்வ நம்பிக்கையின் தொடர்ச்சியாக நம்பிக்கைகள் காணப்படுகின்றன.

நம்பிக்கை என்பது உணர்ச்சிகளின் வெளிப்பாடு ஆகும். மூளையில் பதியும் எண்ணங்கள் உண்மையாகி உறுதி படும் போது நம்பிக்கையாக மலர்கின்றன. நம்பினோர் கெடுவதில்லை என்னும் தொடர் இறை மீது வைத்துள்ள நம்பிக்கையைக் குறிக்கிறது. நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்ச உணர்வை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாகவேக் காட்சி தருகின்றன” (Arul Padmarasan, 2010). நம்பிக்கைகள் வாழ்வில் இணைந்த செயல்பாடாகும். நம்பிக்கைகள் நம் அன்றாட வாழ்வில் நம்மால் பின்பற்றப்படுகிறது. பள்ளிகொண்டபுரம் நாவலில் தெய்வ நம்பிக்கை சித்தரிக்கப்பட்டுள்ளது. தொட்டிலுக்குள்ளிருந்து பொம்மை எடுக்கும் முறைமை கோயிலில் காணப்பட்டது. உலோக பொம்மை எடுப்பவர் குழந்தைப் பேறு பெறுபவர் எனவும், மரபொம்மை எடுத்தால் தீய சகுனம் எனவும் நம்பினர். அனந்தன்நாயரும் கார்த்தியாயினியும் கோயிலுக்குள் வந்து தொட்டிலுக்குள் கைவிட்டு பொம்மையை எடுத்ததனை,

“தானும் கார்த்தியாயினியும், அன்று முதல் முறையாக ஒன்றாக இங்கே வந்திருந்தபோது, அவள் எவ்வளவு ஆவலோடு துடிதுடிப்போடும் பகவானை வேண்டிக் கொண்டவாறு இங்கே வந்து, தொட்டிலில் கைவிட்டு பொம்மையை எடுத்தாள்! கையில் கிடைத்தது உலோக பொம்மை என்று கண்ட போது சின்னக் குழந்தை குழந்தையைப் போல் மகிழ்ந்து, பெண்மையின் நாணத்தால் விழிகள் படபடக்க அவள் தன்னைப் பார்த்த பார்வை!" என்று அனந்தன்நாயர் நம்பிக்கையினூடாகப் பெற்ற மகிழ்வை எடுத்துக் கூறுகிறார் (Padmanabhan, 1970). நம்பிக்கைகள் மனதில் உறுதியையும், உணர்வையும் நல்கும் ஊக்க மருந்தாகச் செயல்படுவதைக் காண இயல்கிறது.

## விழாக்கள்

விழாக்கள் மக்கள் அனைவரும் ஒன்று கூடி கொண்டாடுவது ஆகும். கோயில் திருவிழா, பிறந்தநாள் விழா, திருமண நிகழ்வு, ஓணத் திருவிழா என்பன மக்களால் கொண்டாடப்படும் விழாக்கள் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக இவ்விழாக்கள் அமைகின்றன.

“விழாக்கள் என்பன ஆதி மக்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் கூட்டுச்சடங்கிலிருந்து தோன்றியனவாகும் ஆதி மக்கள் தனிநபருக்கோ, குழுவினருக்கோ தீங்கான நெருக்கடி உண்டாகும் காலத்தில் அதை நீக்கிக் கொள்வதற்காகவும் அந்தக் காலத்தில் உண்டாகும் உள்ளக் கிளர்ச்சி அமைவதற்காகவும் சடங்குகளில் கலந்து கொள்வது வழக்கமாய் இருந்தது” என்று கலைக்களஞ்சியம் விழாக்களைப் பற்றி கூறுகிறது.

ஓணவிழா மகாபலி என்னும் மன்னன் ஆண்டுக்கு ஒரு முறை நாடு காண வரும் நிகழ்வைக் கொண்டாடும் விழா ஆகும். மகாபலியை வரவேற்க ஓணவிழாவின் போது புதிய ஆடைகளை உடுத்தி, வகை வகையான உணவுகளைச் சமைத்து, ஊஞ்சல் கட்டி விளையாடி, தங்கள் மகிழ்வின் உணர்வினை வெளிப்படுத்துவர்.

ஓணம் கேரளாவின் தேசியப் பண்டிகை. “காணம் விற்று ஓணம் கொண்டாட வேண்டும்” என்னும் பழமொழி ஓணவிழாவின் முக்கியத்துவத்தை விளக்குகிறது.

பால் குளங்கரைத் தாறவாட்டு வீட்டில் வைத்து ஓணம் கொண்டாடப்படும் நிகழ்வு பள்ளிகொண்டபுரம் நாவலில் விளக்கப்பட்டுள்ளது. ஓண விழாவைக் கொண்டாட கல்யாணியும், அவளுடைய கணவனும் வந்திருந்த நிகழ்வை

“நாயர் வீடுகளில் கொட்டும் குரவையுமாக ஒரே பரபரப்பு"

கோடி ஆடைகளும், உப்பேரியும், பிரதமனும் விதவிதமான மணங்களை எழுப்பிக்கொண்டிருந்தன (Padmanabhan, 1970). அடுத்த வீட்டு அக்காட்சிமார்களும்,

"மா வேலி நாடு வாணிடும் காலம்

மனுஷரெல்லாம் ஒன்னு போலே

கள்ளமும் இல்ல, சதியும் இல்லா"

என்று மகாபலி நாடாண்ட பொற்கால மகிமையை எடுத்தோதும் ஓண பாட்டுகளை உற்சாகமாய்ப் பாடியவாறு, "இரண்டு தென்னை மரங்களின் குறுக்கே இழுத்துக் கட்டிய வடத்திலிருந்து, கீழே மர உலக்கையைப் போட்டுக் கட்டி இருந்த ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு ஆகாயம் முட்டுமாறு வீசி வீசி ஆடிக் கொண்டிருந்தார்கள்” என்று கேரளமக்கள் ஓணம் கொண்டாடும் நிகழ்வைப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர் (Padmanabhan, 1970). மகிழ்ச்சியின் விளைவாக ஓணவிழாவைக் கொண்டாடியமையை விளக்கியுள்ளார் ஆசிரியர் நீல. பத்மநாபன்.

கோயில்களில் கொண்டாடப்படும் திருவிழாக்களும் கேரள மக்களிடையே முக்கியப் பங்கு வகிக்கின்றது. திருவிழா பத்து நாட்கள் நடை பெற்றதைப் பள்ளிகொண்டபுரம் நாவல் பதிவு செய்துள்ளது. கோயில்களில் சிறப்பு பூசைகள் நடத்தப்படுவதோடு, கோயில்கள் அலங்கரிக்கப்பட்டு காண்போரைக் கவரும் வகையில் காணப்படும் மாலை வேளையில் மக்களின் மனம் கவரும் வகையில் பல கலைகள் மேடைகளில் நிகழ்த்தப்படுகிறது.

"மாலை வேளைகளில் அமர்க்களமாய் நடக்கும் காக்கருகளி, சொக்கன்களி, திருவாதிரைக்களி முதலிய நாடோடி நடனங்கள்” என்று பல நாட்டார் கலைகள் நடத்தப்படுவதை விளக்கியுள்ளார் ஆசிரியர், கலைகள் பேணப்படவும் அழியாமல் காக்கப்படவும் இத்தகைய விழாக்கள் காரணமாகத் திகழ்கின்றமையை அறிய இயலுகின்றது. பள்ளிகொண்டபுரம் நாவல் எழுதப்பட்ட காலகட்டம் 1970. அக்காலகட்டத்தில் பொழுதுபோக்கு நிகழ்வுகள் குறைவு. ஆகையால் நாட்டுப்புறக் கலைகள் அதிக அளவில் மக்களால் விரும்பப்பட்டதோடு வளர்ச்சியடைந்துள்ளதும் அறிய இயலுகின்றது (Padmanabhan, 1970).

அரச பரம்பரையின் மேற்பார்வையில் நடைபெறும் திருவிழா பள்ளிகொண்டபுரம் நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசர் திருவிழாவிற்கு தலைமை வகிப்பதும் இசை கருவிகள் முழங்க அலங்காரமாய் குடைகளும், கொடிகளும், வெண்சாமரமும், ஆலவட்டமும் வீச ஸ்ரீ பத்மநாப சுவாமி வீதி உலா வருவதை காட்சிப்படுத்தி உள்ளார் (Padmanabhan, 1970). வரலாற்று நிகழ்வாய் இன்றும் பின்பற்றப்படும் மரபு ரீதியான விழாக்கால முறைமையை ஆசிரியர் நீல. பத்மநாபன் பின்வரும் கூற்றின் வாயிலாக பதிவு செய்துள்ளார்.

பங்குனித் திருவிழாவுக்காகக் கொடியேறியிருந்த காலம். அன்று நாலாவது திருநாள் உற்சவம் காலை சீவேலி நடந்து கொண்டிருந்தது. கொடிகள் குடைகள், தழைகள், ஆலவட்டங்கள், வெண்சாமரங்கள், பஞ்சவாத்தியங்கள் புடைசூழ ஒற்றை பரிவட்டம் அணிந்து மகாராஜா

பொன்னுதிருமேனி, பரிவாரங்களுடன் கால்நடையாக உடன் செல்ல, யானைகள் மீது எழுந்தருளியிருந்த ஸ்ரீ பத்மநாபசுவாமி, மேல்சாந்தி, கீழ்சாந்தி ஸ்ரீ கரியக்காரர் முதலிய ஆலய ஊழியர்களுடன் ஒற்றைக்கல் மண்டபத்தைச் சுற்றி நீண்டு நிமிர்ந்து பிரம்மாண்டமாய்த் திகழ்ந்த சீவேலி மண்டபத்தில் வலம் வந்து கொண்டிருந்த தருணம்" (Padmanabhan, 1970).

என்று விழாக்கால நிகழ்வை பதிவு செய்துள்ளார். ஆசிரியர் நீல. பத்மநாபன். அரச ஆட்சியில் கோயில்கள் முக்கியத்துவம் பெறுவதையும், அரசன் முதன்மை பெறுவதையும் அறிய முடிகின்றது. விழாக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி அரசோடு இணைந்து இறை ஆட்சியை வெளிப்படுத்துகிறது.

## முடிவுரை

எண்ணற்ற இலக்கியத் தடங்களைத் தன்னகம் கொண்ட தமிழ் இலக்கியத்தில் புதினம் வாழ்வியல் சித்தரிப்புகளைப் புனைவதில் முதன்மை பெறுகின்றது. ஆசிரியர் நீல.பத்மநாபனின், 'பள்ளிகொண்டபுரம்' நாவல் கேரள மக்களின் வாழ்வியலை உணர்த்தும் தன்மையைக் கொண்டுள்ளது. ஆசிரியர் நீல. பத்மநாபன் கேரளாவில் வாழும் தமிழ் எழுத்தாளர் ஆதலால் கேரள மக்களின் வாழ்வியலை உள்ளபடி படியெடுத்துள்ளார். கேரள மக்கள் பயன்படுத்தும் உணவு, உடை, நம்பிக்கை, விழாக்கள் என்பன பள்ளிகொண்டபுரம் நாவல் வாயிலாக விவரித்துள்ளார் ஆசிரியர் நீலபத்மநாபன். இயல்பு மாறாமல் எதார்த்த வாழ்வியலை கேரளப் பண்பாட்டின் படிநிலையை நாவல் எழுதப்பட்ட காலத்தின், சூழலின் அமைப்பில் விவரித்திருப்பது சிறப்பிற்குரியது. நாவல் எழுதப்பட்டகாலத்தின் வாழ்வியற் சூழல் படிப்போர் உணரும் வகையில் விவரித்துள்ளார் ஆசிரியர் நீல. பத்மநாபன்.

## References

Arul Padmarasan, (2010) Tamilar Panpadu. Tamilarasan Pathippagam, Chennai, India.

Gurusamy, M.P. (1999) Marunthagagum Unavu, Kasthuri Power Press, Chennai, India.

Ilampuranar, (2005) Tholkappiyam, Saradha Pathippagam, Chennai, India.

Padmanabhan, N. (1970) Pallikondapuram, Kalachuvadu Pathippagam, Nagercoil, India.

Sanmugasundaram, S. (1999) Ilakkiya Thadam, Lakshmi Sundar Press, Bangalore, India.

Vairamuthu, (1999) Peiyena Peiyum Mazhai, Visa Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License